# வானவில்

VAANAVIL
ISSUE – 5 MAY 2011

இதழ் - 5 வைகாசி 2011


## இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாக

# தமிழ் தேசியக் கூட்டமைப்பு

## தனது கொள்கையை வெளியிட வேண்டும்



அரசாங்கத்துக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையில் இந்தச் செய்தி எழுதப்படும் வரையில் 6 சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று முடிந்துள்ளன. இந்தப் பேச்சுவார்த்தைகளின் போது என்ன விடயங்கள் பேசப்பட்டன என்றோ, அல்லது பேச்சுவார்த்தையில் என்ன முன்னேற்றங்கள் ஏற்பட்டன என்றோ, இரு தரப்பினரும் உத்தியோகபூர்வமாக இதுவரை எதுவும் வெளியிடவில்லை.

இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலமே ஒரு தீர்வுகாணப்பட வேண்டும் என்ற கருத்து இலங்கை அரசுகளாலும், பல்வேறு அரசியல் கட்சிகளாலும், சர்வதேச சமூகத்தினாலும் கடந்த காலத்தில் தொடர்ச்சியாக வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. தமிழ் தலைமைகளைப் பொறுத்தவரை, ஆரம்ப காலங்களில் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக்கட்சித் தலைமைகள் பேச்சுவார்த்தை மூலமான தீர்வை ஏற்றுக்கொண்டிருந்த போதிலும், அதற்கு முரணாகத் தமது சுயநல அரசியல் குதிரையை ஓட்டுவதற்காக அவை தமிழ் இனவாதத்தையும் கைவிடாமல் கடைப்பிடித்து வந்துள்ளன.

தற்போது தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்ற பெயருடன் இருக்கும் நான்கு கட்சிக் கூட்டணி, கடந்தகாலங்களில் (2009 மே மாதம் புலிகள் அழியும் வரை) பேச்சுவார்த்தை வழிமுறைகளை நிராகரித்து, புலிகளின் வன்முறைப் பாதையை வெளிப்படையாக ஆதரித்து வந்த ஒரு கட்சியாகும். இன்று அவர்கள் பேச்சுவார்தை மேசைக்கு வந்தாலும், மனப்பூர்வமாக அதில் ஈடுபடுகிறார்கள் என்று சொல்லிவிட முடியாது.

அக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் சிலர், ‘அரசாங்கம் சர்வதேச சமூகத்தின் அழுத்தம் காரணமாகவே தம்முடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றது’ என திரும்பத் திரும்பக் கூறிக்கொண்டாலும், ‘இந்தியாவின் நிர்ப்பந்தம் காரணமாகவே தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபடுகின்றது’ என்ற மறுபாதி உண்மையும் அதில் உள்ளது.

அது ஒருபுறம் இருக்க, தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்த வரை, அவர்களிடம் பேச்சுவார்த்தைக்கான தெளிவான திட்டங்களோ, நிகழ்ச்சி நிரலோ இருப்பதாகவும் தெரியவில்லை. பல தடவைகள் அவர்கள் இனப்பிரச்சினைத் தீர்வு சம்பந்தமாகத் தமது திட்டத்தை முன்வைக்கப் போவதாகக் கூறிக்கொண்டாலும், இன்று வரை அவ்வாறான திட்டமெதையும் முன்வைக்கவில்லை.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

**தொடர்பு முகவரி:**

**'வானவில்' இதழுக்கு கட்டுரைகள், துணுக்குகள், தகவல்கள், விமர்சனங்கள், ஆலோசனைகள் என்பனவற்றை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெறவிரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் பின்வரும் மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

sunvaanavil@gmail.com

---

**வானவில்**

# புலம்பெயர் தமிழர்களின் சிந்தனைக்கு....

1983 ஜீலை 23ல் யாழ். திருநெல்வேலியில் இராணுவ வாகனம் ஒன்றின் மீது கண்ணிவெடித் தாக்குதல் நடாத்திய விடுதலைப் புலிகள், அதில் பயணித்த 13 இராணுவ வீரர்களைக் கொன்றனர். அதைத் தொடர்ந்து அப்போது ஆட்சியில் இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி அரசு, தலைநகர் கொழும்பிலும் தென்னிலங்கையின் இதர பகுதிகளிலும் வாழ்ந்து வந்த தமிழ் மக்கள் மீது பாரிய இன வன்செயலைக் கட்டவிழ்த்துவிட்டது.

இந்த வன்செயலின் போது நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் படுகொலை செய்யட்டும், பெண்கள் பாலியல் வன்முறைக்குள்ளாக்கப்பட்டும், அவர்களின் பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் சூறையாடப்பட்டும் பெரும் துன்பத்துள்ளாக்கப்பட்டனர். அதைத் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் இந்தியாவுக்கும், ஐரோப்பிய நாடுகளுக்கும், கனடா, அவுஸ்திரேலியாவுக்கும் புலம் பெயர்ந்தனர். மறுபக்கத்தில் தமிழ் இளைஞர்களின் ஆயுதக்குழுக்கள் உருவாகி அரச படைகளுக்கெதிரான ஆயுதப் போராட்டமும் ஆரம்பமானது. இந்தப் போராட்டத்துக்கு இந்தியாவின் சகல விதமான ஆதரவும் இருந்தது.

அதன் பின்னர் அரச பயங்கரவாதத்தின் செயல்பாடுகளின் காரணமாகவும், சகோதர இயக்கப் படுகொலைகள் காரணமாகவும், இறுதியில் புலிகள் இயக்கம் மற்றைய இயக்கங்களைத் தடைசெய்து அவற்றை அழித்தொழித்ததின் காரணமாகவும், மேலும் பல இலங்கைத் தமிழர்கள் மேற்கு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தனர். இவ்வாறு புலம்பெயர்ந்தவர்களின் அகதிக் கோரிக்கை மனுக்களின் விசாரணையின் போது, தாம் நாட்டை விட்டு வெளியேறியதிற்குச் சொன்ன காரணங்களில், 60 வீதமானோர் அரச பயங்கரவாதம் காரணமெனவும், 40 வீதமானோர் புலிகளின் பயங்கரவாதம் காரணமெனவும் தெரிவித்துள்ளதாக சில புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

இறுதியில் புலிகள் இயக்கம் தன்னை ஒரேயொரு தனிக்காட்டு ராஜாவாக நிலை நாட்டிக்கொண்டதால், தாயகத் தமிழர்கள் மட்டுமின்றி, புலம்பெயர் தமிழர்களும் தவிர்க்க முடியாமல் அவர்களது பிடிக்குள் சிக்கிக் கொண்டார்கள். ஆதனால் இலங்கையில் பெரும் அழிவுகளுக்கு வழிவகுத்த புலிகளின் யுத்தத்துக்கு புலம்பெயர் தமிழர்கள் விரும்பியோ விரும்பாமலோ பணத்தை வாரி வழங்கினர். அவர்கள் வழங்கிய பணம் தாயகத்தில் வாழ்ந்த தமிழ் மக்களுக்கு மேலும் மேலும் அழிவுகளைக் கொண்டு வந்ததே தவிர, எவ்வித விமோசனத்தையும் கொண்டு வரவில்லை. இறுதியில் புலிகளும் மக்கள் ஆதரவின்னையாலும்,, தமது முட்டாள்தனங்களாலும் 2009 மேமாத இறுதி யுத்தத்தில் அழிந்து போயினர்.

இப்பொழுது தாயகத் தமிழர்கள் புலிகளின் பிடியிலிருந்து விடுபட்டு, யுத்த பீதியற்ற சூழலில், யுத்தம் ஆரம்பமாவதற்கு முன்னர் இருந்த இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர். அதை எப்படியும் குழப்பி விடுவதென புலம்பெயர் நாடுகளிலுள்ள புலிகள் மீண்டும் முயற்சிகளை ஆரம்பித்துள்ளனர். அவர்களது நோக்கம் ஒரு பக்கத்தில் தாயகத் தமிழ் மக்களை மீண்டும் இராணுவக் கெடுபிடிக்குள்ளாக்குவதும், மறுபக்கத்தில் யுத்தம் முடிவுற்ற பின்னர் தமது தாயக உறவுகளைப் பார்ப்பதற்காகவும், தமது சொந்த மண்ணைப் பார்ப்பதற்காகவும் ஆயிரக்கணக்கில் தாயகம் சென்று வரும் புலம்பெயர் தமிழர்களை அங்கு செல்லாமல் தடுப்பதும்தான்.

புலம்பெயர் புலிகளின் திட்டமிட்ட இந்தச் சதி நாச வேலைகளால் ஏற்கெனவே பல பாதிப்புகள் ஆரம்பித்துவிட்டன. புலம்பெயர் இலங்கையர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமை வழங்குவதை அரசாங்கம் நிறுத்தி வைத்துள்ளதுடன், ஏற்கெனவே வைத்திருப்பவர்களின் உரிமையும் பரிசீலனைக்கு உள்ளாக்கப்பட இருக்கிறது. அத்துடன் யுத்தம் முடிவுற்ற பின்னர் உருவான சுதந்திரமாக இலங்கையின் எப்பகுதிக்கும் போய்வரக்கூடிய சூழல் மறைந்து,. இப்போது வடக்கு கிழக்குப் பகுதிகளுக்குச் செல்வதானால் முன்னரைப்போல பாதுகாப்பு அமைச்சின் பெற வேண்டும் என்ற நிலை உருவாகியுள்ளது. இன்னும் பல கெடுபிடிகள் வருவதற்கு வாய்ப்புகள் உள்ளன.

இவையெல்லாம் புலம்பெயர் நாடுகளிலுள்ள புலிகளின் நாச வேலைகளால் வந்தவை என்பதைப் புரிந்து கொண்டு, புலம்பெயர் தமிழ் மக்கள் அவர்களுக்கு இனிமேல் எவ்வித ஆதரவும் வழங்காமல் எச்சரிக்கையுடன் நடந்து கொள்ள வேண்டும் என 'வானவில்' கேட்டுக் கொள்கிறது.
*

---

# ஒசாமாவிற்கு பின்னரான நிலவரங்கள் தொடர்பாக பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் அறிக்கை



தோழர் இம்தாத் காசி

"தனிப்பட்ட மற்றும் குழு நலன்களை அடைவதற்காக பாகிஸதானின் இராணுவ நிறுவனத்தால் நீண்டகாலமாக கடைப்பிடிக்கப்பட்டுவரும் என்றுமே பிழையான பித்துப்பிடித்துப்போன கொள்கைகள், நாட்டினை அழிவுகரமான யுத்தத்தின் விளிம்பிற்கு கொண்டு வந்துள்ளது. அமெரிக்கா மற்றும் ஏனைய கொள்ளைக்கூட்டத்துடன் கூட்டாக இணைந்து இந்த ஆளும் கும்பல் ஆப்கானிஸ்தானின் சர்வதேச அரசியல் மற்றும் ராஜதந்திர நெறிகளை முற்றுமுழுதாக மீறி, சுதந்திரத்தையும் இறையாண்மையும் ஆர்ப்பரித்தவாறு சூறையாடியதானது, மூன்று சகாப்தங்களுக்கு மேலாக, என்றென்றைக்கும் தீப்பிழம்பாகிப்போன யுத்தக்களமாக இதனை மாற்றியுள்ளது. இந்த நாட்டின் பூகோள சுதந்திரத்திற்கும் இறையாண்மைக்கும் முற்றுமுழுதாக அப்பால் சென்று, பாகிஸ்தானின் இராணுவ நிலையங்களுக்கு உள்ளே வந்து இன்று சுதந்திரமாக தாக்குதல்களை நிகழ்த்தும் ஏகாதிபத்திய அமெரிக்கா, நேரடியாக அச்சுறுத்தும் எதிரி என்பதற்கு இது ஒரு அப்பட்டமான உதாரணமாகும்."

பாகிஸ்தான் கம்யூனிஸ்ட் கட்சியின் துணைப்பொதுச்செயலாளர் தோழர் இம்தாத் காசி ஊடகங்களுக்கு வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு கூறினார்.

மத அடிப்படைவாத பாசிச சக்திகளினதும் சர்வதேச மற்றும் பிராந்திய பயங்கரவாதிகளின் குகையாக பாகிஸ்தான் சந்தேகத்திற்கிடமின்றி மாறியுள்ளதெனவும் அவர் மேலும் குறிப்பிட்டார். கமாண்டோ இராணுவ நடவடிக்கை ஊடாக ஒசாமாவை கொன்றதும் மேலும் பல அல்கைடா குற்றவாளிகளை கைது செய்ததும், பாகிஸ்தானில் பயங்கரவாத சக்திகள் மையம் கொண்டுள்ளனர் என்பதை வற்புறுத்துவதற்கான மிகத்தெளிவான மேலுமொரு சான்றாக இருப்பதால், இந்த மாதிரியான கோழைத்தனமான நடவடிக்கைகள் இனிவரும் காலங்களில் தொடர்வதற்கான உலகத்திற்கு மேலதிக முன்மொழிவுகளையும் அளித்துள்ளதென்றும் தெரிவித்தார். பாகிஸ்தான் இராணுவ நிறுவனம் தனது நடவடிக்கைகளை மாற்றவேண்டும் எனவும் தீவிர அடிப்படைவாத குருட்டுத்தனமான கொள்கைகளை நிறுத்தவேண்டும் எனவும் தோழர் இம்தாத் காசி எச்சரிக்கையோடு குறிப்பிட்டார். நாட்டின் முற்போக்கு மற்றும் புத்திஜீவி பிரிவினர் முன்னே வந்து, நாட்டின் ஆளும் குழுவின் யுத்த முனைப்புக்கொண்ட திசையை மாற்றுவதற்கு, பாகிஸ்தான் மக்கள் சக்தியின் ஊடாக, அவர்களுடைய வரலாற்றுக்கடமையை செய்யவேண்டுமென அவர் அழைப்பு விடுத்தார். இல்லாவிடின் மிக விரைவில், அமெரிக்காவின் இத்தகைய இராணுவ நடவடிக்கைகள் நாட்டின் சுதந்திரத்தையும் இறையாண்மையும் சோதனைக்கு உள்ளாக்குவது மாத்திரமன்றி, பாகிஸ்தானை இன்னுமொரு கற்காலத்து ஆப்கானிஸ்தானாக இட்டுச்செல்லும் என்று கூறினார்.
*

---

# மரணப் படுக்கையில் இருந்த எம்.ஜீ.ஆர் பிரபாகரனுக்கு பணம் அனுப்பினாராம்! சீமானின் புரட்டுக் கதை!!

சன்னதன்

தமிழக இயக்குநர் சீமான் எழுதும் 'திருப்பி அடிப்பேன்' தொடரில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் பேசியதை நினைவுகூர்ந்து பின்வருமாறு எழுதியிருக்கிறார்.

"இந்திய அமைதிப்படையை நம்பி நாம் ஆயுதங்களை ஒப்படைத்த நேரம், நம் ஆயுதங்களை வாங்கி போட்டிக் குழுக்களுக்கு கொடுத்து நமக்கு எதிரான போரைத் தூண்டிவிட்டது இந்திய அமைதிப்படை. மொத்தமாக 600 போராளிகள் மட்டுமே அப்போது இருந்தார்கள். 100 பேர் கொண்ட குழுக்களாகப் போராளிகளைப் பிரித்து அனுப்பிவிட்டு, நான் களத்தில் நிற்கிறேன். எந்தக் கணத்திலும் எதுவும் நடக்கலாம் என்ற நிலை. 'பிரபாகரனை நெருங்கி விட்டோம்., இனி அவர் தப்பிப்பது கனவிலும் சாத்தியமில்லை' என இந்திய அமைதிப்படை கொக்கரிக்கிறது. எது குறித்தும் சிந்திப்பதற்கு கணமற்ற வேளையில் தம்பி கிட்டு ஒரு பெட்டியில் பணத்தோடு வந்தார். மொத்தமாக 36 லட்சம் ரூபாய். "தம்பி கஸ்டப்படுவார். இதை நான் கொடுத்ததாகச் சொல்லி அவரிடம் கொடு. எதுவும் நடக்காது. தம்பியைத் தைரியமாக இருக்கச் சொல்" எனச் சொல்லி எம்.ஜீ.ஆர் கொடுத்து அனுப்பிய பணம் என்றார் கிட்டு.

"……தேசியக் குற்றம் என்று தெரிந்தும் அண்ணனுக்கு எம்.ஜீ.ஆர் உதவத் துணிந்தது என் நெஞ்சத் தசைகளை எல்லாம் துள்ளத் துடிக்க வைத்தன."

"ஈழம் அடைய எவ்வளவடா தம்பி தேவைப்படும் என்று எம்.ஜீ.ஆர். கேட்க, '100 கோடி தேவைப்படும்' என அண்ணன் சொன்ன உடனேயே, 'நான் தர்றேன், நான் தர்றேன், நீ நல்லா சண்டை பிடி' என்று தைரியம் வார்த்த எம்.ஜீ.ஆர்…."

சீமானின் இந்தக் குறிப்போடு அன்றைய நாட்களை நினைவுக்குக் கொண்டு வருவோம்.

1987 அக்டோபர் 10ந் திகதி இந்திய அமைதிப்படைக்கும் புலிகளுக்கும் இடையில் சண்டை ஆரம்பமானது. 1987 டிசம்பர் 23ந் திகதி எம்.ஜீ.ஆர். காலமானார். இக்காலப் பகுதியில் எம்.ஜீ.ஆர். கடுமையாக நோய்வாய்ப்பட்டு பல்வேறு சிகிச்சைகளுக்குட்பட்டிருந்தார்.

சென்னையில் தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு தடுப்புக் காவலில் இருந்த கிட்டு, 1988 அக்கோபர் நடுப்பகுதியில் (ஒரு வருடத்தின் பின்னர்) இந்திய அமைதிப்படையினரால் யாழ்ப்பாணத்தில் தடுப்புக் காவலுக்கு மாற்றப்பட்டு, கால் ஊனம் காரணமாக விடுவிக்கப்பட்டு, அதன் பின்னரே பிரபாகரனிடம் அலம்பில் காட்டுக்குச் சென்று சேர்ந்தார்.



எம்.ஜீ.ஆர். புலிகளுக்கு பெருமளவு பணம் உட்பட பல்வேறு உதவிகளும் புரிந்தது உண்மைதான். அது இந்திய மத்திய அரசு இலங்கைப் போராளிக் குழுக்களுக்கு இராணுவப் பயிற்சிகளும் வழங்கி, அங்கு பயிற்சிப் பாசறைகளும் வைத்திருக்க அனுமதித்த காலத்திலேயே நடந்தது. நிலைமை இப்படியிருக்க, பிரபாகரன் தனது போராளிகளை 100 பேர் கொண்ட ஆறு குழுக்களாகப் பிரித்து அனுப்பிவிட்டு எந்த நேரத்திலும் என்ன நடக்கலாம் என்று இருந்த நேரத்தில், கிட்டு எம்.ஜீ.ஆர் கொடுத்த 'பெட்டியுடன்' வருவது என்பது, சீமான் இயக்கும் படங்களின்

‘கிளைமாக்ஸ்’ காட்சிகளுக்குத்தான் பொருத்தமாக இருக்குமேயொழிய, நிஜ வாழ்க்கைக்கு அல்ல.

எம்.ஜீ.ஆருக்கு மிக நெருக்கமாக இருந்த புலமைப்பித்தன் என்பவர், 2008ல் ‘குமுதம் றிப்போட்டர்’ இதழுக்கு வழங்கிய ஒரு நேர்காணலில் பின்வருமாறு கூறியிருக்கிறார். “விடுதலைப் புலிகளுக்கு எம்.ஜீ.ஆர். கோடி கோடியாகப் பணத்தை வாரிக் கொடுத்தார். ஒரு கட்டத்தில் தம்பியிடம் (பிரபாகரனிடம்) ‘ஆயுதப் புரட்சி மூலம் ஈழத்தைப் பெற எவ்வளவு பணம் வேண்டும்’ என்று கேட்டார். தம்பி கொஞ்ச நேரம் யோசித்து விட்டு, ‘நூறு கோடி தேவைப்படும்’ என்றார். ‘சரி பார்க்கலாம்’ என்றார் எம்.ஜீ.ஆர்”.

இதனோடு 2011ல் மேலே தரப்பட்ட சீமானின் குறிப்பிலுள்ள கடைசிப் பந்தியை – குறிப்பாக “நான் தாறேன், நான் தாறேன் நீ நல்லா சண்டை பிடி” வசனத்தை ஒப்பிடுங்கள். சினிமாக்காரர்களின் மொழியில் ‘உல்டா’ பண்ணுவது என்றால் என்ன என்பது அப்போது உங்களுக்குப் புரியும்.

பிற்குறிப்பு
தமிழீழத்தின் ‘உற்பத்திச் செலவு’ கணிப்பீடு செய்யப்பட்டது போல், எதிர்காலத்தில் ‘சந்தை விலையும்’ தீர்மானிக்கப்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.
*

## குறும்படம் என்றால் என்ன?




‘‘குறும்படம் என்பது குட்டி சினிமா இல்லை. சினிமா என்பது ஒரு நாவல் என்றால், குறும்படம் என்பது சிறுகதை. பலர் ஆவணப் படத்தையும், குறும்படத்தையும் குழப்பிக் கொள்கிறார்கள். ஆவணப் படம் என்பது, சமூக வரலாற்றை அப்படியே பதிவு செய்வது. அதில் கற்பனைகளுக்கு இடம் இல்லை. நியூஸ் ரீல், விளையாட்டுச் செய்திகள், அறிவியல் செய்திகள், வரலாறு, பழங்கால வாழ்க்கை, கோயில்கள், பயண நிகழ்வுகள், டிஸ்கவரி சேனல் செய்திகள் அனைத்தும் ஆவணப் பட வகையில் வரும்.

குறும்படம் என்பது கிட்டத்தட்ட ‘மைக்ரோ சினிமா’ வகையைச் சேர்ந்தது. கதையின் தன்மைக்கேற்ப நடிகர்களை நடிக்க வைப்பது, சினிமா போன்ற அதிகாரக் கட்டமைப்பு இல்லாமல், யாரும் எவரும் குறும்படம் இயக்கலாம். கையடக்க கேமரா, செல்போன் என நவீன சாதனங்கள் குறும்படம் உருவாக்குவதை இன்று எளிமையாக்கிவிட்டன.

செல்போனில் படம் எடுத்து, இன்டர்நெட்டில் எடிட்டிங் சாஃப்ட்வேர் டவுன்லோடு செய்து, செலவே இல்லாமல் படத்தை முடித்து விடலாம். இன்டர்நெட்டில் மைக் இணைத்து, டப்பிங்கையும் சுலபமாக முடிக்கலாம். உங்களுக்குள் இருக்கும் கற்பனைத் தாகத்துக்கு, குறும்படம் நிச்சயம் ஒரு தளமும் களமும் அமைத்துக் கொடுக்கும்’’

- இவ்வாறு கூறுகிறார், கடந்த 10 ஆண்டுகளாக குறும்படங்கள் மற்றும் ஆவணப் படங்களுக்கு என்று ‘நிழல்’ இதழை நடாத்தி வரும் திருநாவுக்கரசு.

நன்றி – ஆனந்த விகடன்

*

*தத்துவ ஞானிகள் உலகத்தைப் பல்வேறு வழிகளில் வியாக்கியானப் படுத்தி மட்டுமே வந்திருக்கிறார்கள். ஆனால், அதை மாற்றுவதுதான் இப்போதுள்ள விஷயமாகும்.*

*- மார்க்ஸ்*

# ஆபிரிக்காவில் சீனாவின் பாத்திரம்தான் என்ன?

**ஆ**பிரிக்காவை சீனா காலனியாக்குகிறது, ஆபிரிக்காவுடனான அதன் உறவு ஆக்கிரமிப்புத்தன்மை வாய்ந்தது, கேடுவிளைவிக்கக்கூடியது என்ற அமெரிக்கா உள் ளடங்கலான மேற்குலகின் கூக்குரலுக்கு மத்தியில், சீனாவிற்கு அங்கு என்னதான் வேலையென்று பார்த்துவிடலாம்.

2006ஆம் ஆண்டில் சீனாவிற்கும் ஆபிரிக்க நாடுகளுக்குமிடையே நிகழ்ந்த உச்சி மகாநாட்டில் சீனாவால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் பற்றியும், அதற்கு முன் பின்னாக நிகழ்ந்த விடயங்கள் பற்றியும், பார்ப்பது இந்த இடத்தில் பொருத்தமானது.

1950இல் 12.14 மில்லியன் அமெரிக்க டொலர்களாகவிருந்த சீன- ஆபிரிக்க இருபக்க வர்த்தகம், 2008இல் 100 பில்லியன் அமெரிக்க டொலர்களை விஞ்சியது. பின்னரிது 2010இல் 114.81 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியது. 2008இல் சீனா, 50.8 பில்லியன் பெறுமதிவாய்ந்த பொருட்களை ஆபிரிக்காவிற்கு ஏற்றுமதி செய்தும், 56 பில்லியன் அமெரிக்க டொலர்கள் வாய்ந்த பொருட்களை, ஆபிரிக்காவிலிருந்து இறக்குமதி செய்துமுள்ளது. 2000 – 2008 இடைப்பட்ட காலப்பகுதியில், சராசரி வருடாந்த இருபக்க வர்த்தக வளர்ச்சி 33.5 வீதத்தையடைந்தது. இதில் சீனாவின் வெளிநாட்டு வர்த்தகம், 2.2 வீதத்திலிருந்து 4.2 வீதமாக உயர, ஆபிரிக்காவின் வெளிநாட்டு வர்த்தகமோ 3.8 வீதத்திலிருந்து 10.4 வீதமாக உயர்ந்தது.

இது மட்டுமல்லாது மூன்றிலிருந்து ஐந்து வரையிலான கடல் கடந்த பொருளாதார வர்த்தக ஒத்துழைப்பு வலயங்களை அமைத்தல், குறை அபிவிருத்தியுடைய ஆபிரிக் காவின் 440 வகையிலான பொருட்களுக்கு ஏற்றுமதி வரிச்சலுகையளித்து ஏற்றுமதியை ஊக்குவிக்கும் பொருட்டு சீனாவின் சந்தையைத் திறந்துவிடல், கடன் பளுவால் தவிக்கும் வறிய மற்றும் குறையபிவிருத்தியுடைய ஆபிரிக்கநாடுகளின் 2005ஆம் ஆண்டிற்குட்பட்ட வட்டியில்லா அரசாங்க கடன்களை தள்ளுபடி செய்தல் என்பவற்றுடன் 2000ஆம் ஆண்டிலிருந்து 2009ஆம் ஆண்டு வரைக்குமான 35 ஆபிரிக்க நாடுகளின் 312 கடன்களை ரத்து செய்துமுள்ளது. இதன்பெறுமதி 18.96 பில்லியன் சீன யுவான்களாகும்.




ஒரு அமெரிக்க டொலர் அண்ணளவாக 6.82 யுவான்கள்.

2006இல் அளிக்கப்பட்ட உதவிகளை 2009ஆம் ஆண்டிற்குள் இரட்டிப்பாக்கல், சீன -ஆபிரிக்க அபிவிருத்தி நிதியை உருவாக்குவதல், அதன் மொத்த தொகையைப் படிப்படியாக 5 பில்லியன் டொலர்கள் வரை உயர்த்துவது, சீனக்கம்பனிகளுக்கு ஆபிரிக்காவில் முதலீடு செய்வதற்கு ஆதரவையும், ஊக்கத்தையும் கொடுப்பது என்றும் சீனா வாக்குறுதி அளித்துள்ளது.

**ஆனந்ததேவன்**

சீன- ஆபிரிக்க விவசாயக்கூட்டுறவு ஸ்தாபனத்தின் இறுதி இலக்கு, ஆபிரிக்காவின் உணவுத் தேவையை உத்தரவாதப்படுத்துவதே. இதன்பொருட்டு உட்கட்டுமான அமைப்பு, உணவு உற்பத்தி, தொழிலாளர்களை உருவாக்கும் தொழிற்சாலைகள், விவசாயத்துறையில் பயனுறு தொழில்நுட்பத்தைப் பரிமாறுவது, ஒழுங்குபடுத்துவது, விவசாய உற்பத்திப்பொருட்களைப் பாதுகாத்தல், எடுத்துச்செல்லுதல், போன்ற பிரதானதுறைகளில் கவனம் செலுத்துவதாகக் கூறியுள்ளது.

சீனா, பரீட்சார்த்த விவசாயத் தொழில் நுட்பங்கள், விவசாய தொழில்நுட்பத்தைப் பிரபல்யப்படுத்தும் நிலையங்கள், மற்றும் விவசாயப்பண்ணைகள் என 142 இற்கு மேற்பட்ட நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு உதவி செய்துள்ளது. மேலும் ஆபிரிக்காவில் 14 விவரண மையங்களை ஸ்தாபித்ததோடு,

பெருமளவிலான விவசாய மூலப்பொருட்களையும், உபகரணங்களையும் வழங்கியுள்ளது. சீனா விவசாய அபிவிருத்தி முயற்சிகளிலும், விவசாய உற்பத்திப்பொருள் முயற்சிகளிலும் தனது முதலீட்டு நிறுவனங்களை முதலீடு செய்யுமாறு ஊக்குவிக்கிறது.

விவசாயத்தொழில்நுட்பம் சார்ந்த 10 விவரண மையங்களை அமைத்தல், 15000 உத்தியோகஸ்தர்களுக்கு அடுத்துவரும் மூன்று வருடங்களில் பயிற்சியளித்தல், சீனாவின் 100 முதிர்ந்த அனுபவம் வாய்ந்தோரை ஆபிரிக்காவிற்கு அனுப்புதல் போன்ற விடயங்களும் எட்டப்பட்டுள்ளது.

ஆபிரிக்காவில், மருத்துவ வசதிகளையும், ஆரோக்கிய நிலைமைகளையும், மேம்படுத்தும் பொருட்டு சீனா பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. மருத்துவமனைகளைக் கட்டுவதற்கு உதவிபுரிவதோடு, மருத்துவக்குழுக்களை, மருந்துப்பொருட்களை அனுப்புவதிலும் ஈடுபட்டுள்ளது. 2009ஆம் ஆண்டிற்குள், 54 மருத்துவமனைகளையும், 30 மலேரியா (Malaria: Malaria என்ற இத்தாலியச் சொல்லிலிருந்து பிறந்தது. இதன் அர்த்தம் அசுத்தமான காற்று.) தடுப்பு மற்றும் சிகிச்சையளிக்கும் நிலையங்களையும் ஸ்தாபித்துள்ளது. இதன் நிமித்தம் 300 மில்லியன் யுவான்களை அளிக்கிறது. 200 மில்லியன் யுவான்கள் பெறுமதியான மலேரியா எதிர்ப்பு மருந்தை 35 ஆபிரிக்க நாடுகளுக்கு வழங்கியுள்ளது. சீனா 1963இலிருந்து 46 ஆபிரிக்க நாடுகளுக்கு மருத்துவக் குழுக்களையும், 18000 மருத்துவசேவையாளர்களையும் அனுப்பி வைத்துள்ளது. மேலும் 200 மில்லியன் நோயாளர்களுக்கு சிகிச்சையளித்தும் பத்தாயிரக்கணக்கான மருத்துவ உத்தியோகஸ்தர்களுக்கு தசாப்தங்களுக்கு மேலாக பயிற்சியும் அளித்து வருகிறது.

அவர்கள் பொதுவானதும், சாதாரணமாக விரவிக்காணப்படும் நோய்களை மட்டும் குணப்படுத்தவில்லை. மாறாக சவாலானதும் கத்திமுனையில் நடக்கும் இருதய, மூளை சம்பந்தமான நோய்களுக்கும் சத்திரசிகிச்சை அளித்துள்ளனர். மேலும் அவயவங்களை மீளப்பொருத்துவதிலும், அச்சுறுத்தும் பாரிய கட்டிகளை அகற்றுவதிலும் ஈடுபட்டனர். தற்சமயம் ஆயிரத்திற்கும் மேற்பட்ட சீன மருத்துவத்துறை சார்ந்த அலுவலர்கள் 41 ஆபிரிக்க நாடுகளில் சேவையிலீடுபட்டு வருகிறார்கள்.

சீனாவில் ஆபிரிக்க மாணவர்களின் கற்கை நெறிக்காக 26465 மாணவர்களுக்கு புலமைப்பரிசில்களை வழங்கியுள்ளது. தற்சமயம் வருடந்தோறும் 5000 மாணவர்களுக்கு வழங்கிவருகிறது. 2009 ஆம் ஆண்டிற்குள் சீனாவின் உதவியுடன் 107 பள்ளிகளும் கட்டிமுடிக்கப்பட்டுள்ளது. மேலும் ஆபிரிக்காவின் உட்கட்டுமானங்களை மேம்படுத்தும் பொருட்டு வீடுகள், தெருக்கள், பாலங்கள், ரயில்பாதைகள், விமான நிலையங்கள், துறைமுகங்கள், தொலைத்தொடர்பு நிலையங்கள், மின்னிணைப்புக்கள், நீர்வழங்கல்கள், வடிகால் அமைப்புக்கள், மருத்துவமனைகள் போன்றவற்றை அமைப்பதற்கும் உதவிபுரிந்துவருகிறது.

*இவையாவும் Lalkar என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வந்த நீண்ட கட்டுரையின் சுருக்கமே.*

மேற்கூறிய விடயதானங்களிலிருந்து, உதவியின் உதவித்தன்மைபற்றியும், ஆபிரிக்காவில் சீனாவின் நலன்களா?, ஆபிரிக்காவின் நலன்களா? தூக்கலாக நிற்கிறதென்பதனையும் புரிந்துகொள்வதில் அதிகம் சிரமமிருக்காது.

*

---

*நாம் நம்முடைய மனத்தையும் இதயத்தையும் மாற்றினால் ஒழிய, நாம் வாழ்ந்துகொண்டிருக்கும் இந்த பூமிக்கு உயிர் உண்டு என்பதை உணரமாட்டோம். நாம் உருவாக்கும் மாற்றங்களையோ அல்லது மாற்றங்களை உருவாக்கும் நம்மையோ மறுதலித்து, அந்த மாற்றங்களுக்கு எதிர்வினையாற்ற முடிந்த ஓர் உயிராக நாம் இந்தப் பூமியை உணரமாட்டோம். நாம் இந்தப் பூமியை ஓர் உயிருள்ள கிரகமாக, தன் தட்பவெப்பத்தையும் வேதியியலையும் மாற்றிக்கொள்ளும் சக்தி வாய்ந்த ஓர் உயிராக உணர்ந்தால் ஒழிய, இன்று அதை நம் மிகப்பெரிய எதிரியாக்கிவிட்டோம் என்பதை உணர்ந்தால் ஒழிய, நம் வாழ்க்கையை மாற்றிக்கொள்ளும் திட சங்கல்பம் நமக்கு உருவாகாது.*

- ஜேம்ஸ் லவ்லாக்

---

இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் குழு, இலங்கையின் போர்க் குற்றங்கள் சம்பந்தமாக ஆராய்வதற்காக ஐ.நா.செயலாளர் நாயகம் பான் – கீ – மூன் அவர்களால் நியமிக்கப்பட்ட நிபுணர் குழு 2011 ஏப்ரல் 12ல் சமர்ப்பித்த அறிக்கையை ஆராய்ந்தது.

2010 ஜூன் மாதம் இந்த கூறப்படும் நிபுணர் குழு அமைக்கப்பட்ட பின்னர், 2010 ஆகஸ்ட்டில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சியின் 19வது தேசிய காங்கிரசில் நிறைவேற்றப்பட்ட அரசியல் தீர்மானத்திற்கூடாக, இந்தக் குழு அமைக்கப்பட்டதற்கு எமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தோம்.



# மேற்கத்தைய சக்திகளின் நோக்கங்களுக்கு தமிழ்மக்கள் பலியாகக் கூடாது!

## ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கை குறித்து கம்யூனிஸ்ட் கட்சிச் பொதுச்செயலாளர் டியூ குணசேகர அறிக்கை

அத்துடன், “சர்வதேச விவகாரங்களுடன் தொடர்புடைய விடயங்களைக் கையாளும் போது, மேற்கத்தைய சக்திகளின் தலையீட்டுத் தந்திரோபாயங்களுக்குள் விழும் வகையிலான மிகைப்படுத்தப்பட்ட செயல்பாடுகளிலிருந்து விலகி இருக்க வேண்டும்” எனவும் அரசாங்கத்தையும் மக்களையும் எமது கட்சி எச்சரித்திருந்தது. கம்யூனிஸ்ட் கட்சியைப் பொறுத்த வரை இந்தக் குழுவின் சட்டபூர்வத்தன்மை கேள்விக்குரியதாகும்.

புலிகள் இயக்கம் தோற்கடிக்கப்பட்ட கையோடு சில மேற்கத்தைய சக்திகள் இலங்கைக்கு எதிராக ஐ.நா. அமைப்புகள் மூலம் நிறைவேற்ற இருந்த தீர்மானம் தோற்றுப் போனதால், அவை இலங்கைக்கு எதிராக போர்க் குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் தமது அரசியல் நிகழ்ச்சி நிரலைத் தொடர்வார்கள் என கம்யூனிஸ்ட் கட்சி கருதியது.

இந்தச் செயற்பாடுகள் யாவும், அவர்களது சர்வதேச தந்திரோபாயங்களினதும், பூகோள அரசியல் நலன்களினதும் நோக்கங்களுக்காகவும், தேவைகளைகளுக்காகவும் எடுக்கப்படுபவையேயொழிய, தமிழ் மக்கள் மேலுள்ள அன்பினாலோ, மனிதாபிமான கரிசனையினாலோ அல்லது கருணையினாலோ அல்ல என்பதை கம்யூனிஸ்ட் கட்சி நன்கு புரிந்து வைத்திருந்தது.

யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் புலிகள் முற்றுமுழுதாகத் தோற்கடிக்கப்படுவதைத் தடுப்பதற்காக, இந்த சக்திகள் தலையீடுகளை அல்லது மத்தியஸ்தத்தை மேற்கொள்ள எப்படி முயன்றன என்பதை கம்யூனிஸ்ட் கட்சி நினைவுபடுத்த விரும்புகிறது. இந்த சக்திகளின் தலையீட்டு முயற்சிகள் தோல்வியடைந்ததினால் ஏற்பட்ட விரக்தி காரணமாக, அவை இலங்கையை நிலை குலைய வைக்கும் அல்லது ஒரு ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தும் தமது அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுத்து வருகின்றன. புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர், குறிப்பாக கடந்த பாராளுமன்ற – ஜனாதிபதித் தேர்தல்களின் போது, அவர்கள் வெளிப்படுத்திய கீழ்த்தரமான மனோபாவம் இதை நிரூபிக்கின்றது. ஜெனரல் சரத் பொன்சேகாவின் ஜனாதிபதி வேட்பாளர் நியமனம் இந்த விடயத்தில் ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

பான் – கீ – மூன் நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கையானது, நிரூபிக்க முடியாத சம்பவங்களை அடிப்படையாகக் கொண்டதும், சோடிக்கப்பட்ட கதைகள், வதந்திகள், புலிகளுக்குச் சார்பான அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சர்வதேச அரசசார்பற்ற நிறுவனங்களின் மிகைப்படுத்தல்கள், கற்பனைகள் என்பனவற்றால் உருவாக்கப்பட்டதுமான ஒன்றுமாகும்.

ஐ.நாவின் அதிகாரபூர்வமான அமைப்பொன்றே செய்ய முடியாத ஒன்றை, வெளியேயுள்ள அதிகாரபூர்வமற்ற இந்தக்குழு செய்து, ஒரு இறைமையுள்ள நாட்டுக்கு எதிராக பாரதூரமான குற்றச்சாட்டுகளைச் சுமத்தியுள்ளது.

இந்த சட்டபூர்வமற்ற நிபுணர் குழுவானது, 1983 முதல் 2009 வரையிலான நான்கு ஈழப்போர்களின் வரலாற்றுப் பின்னணி, சமாதான முயற்சிகளின் தோல்வி, புலிப் பயங்கரவாதிகளின் தன்மை மற்றும் தந்திரோபாயங்கள், அவர்கள் செய்த கொலைகள் மற்றும் அழிவுகள், மூன்று தசாப்தங்களாக அவர்கள் மக்களுக்கு செய்த விவரிக்க முடியாத துன்பங்கள் என்பன எவை பற்றியும் கவனத்தில் எடுக்கவேயில்லை.

முல்லைத்தீவில் புலிகளால் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தப்பட்ட, சுமார் மூன்று லட்சம் பொது மக்களின் உயிர்களைப் பாதுகாப்புப்படைகள் எவ்வாறு தீரத்துடன் பாதுகாத்தார்கள் என்ற மறுக்க முடியாத உண்மையை, இந்த நிபுணர் குழு வசதியாக மறந்து விடுகிறது. போருக்குப் பிந்திய சூழலைப் பற்றிய நிபுணர் குழுவின் மதிப்பீட்டில், பெரும் முயற்சிகளுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் புனர்வாழ்வு மற்றும் மீள்குடியேற்ற நடவடிக்கைகள் பற்றிப் குறிப்பிடப்படாததுடன், தற்போதைய கள நிலவரத்தையும் நிராகரித்து விடுகிறது. இதுவரை 7000 வரையிலான புலி உறுப்பினர்கள் புனர்வாழ்வளிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளதையும் இந்த அறிக்கை முழுதாக மறந்துள்ளது. புலிகள் தோற்கடிக்கப்பட்ட பின்னர் பயங்கரவாத நடவடிக்கைகள் எதுவும் இல்லாதிருப்பதிலிருந்து, வன்முறையின் ஊற்று மூலம் அவர்களே தான் என்ற உண்மை தெளிவாகின்றது.

இந்த அறிக்கை பேரினவாத சக்திகளைப் வலுப்படுத்துகின்றது. புலம்பெயர் புலிச் சக்திகள் இந்த அறிக்கை சம்பந்தமாகத் தெரியப்படுத்தும் பிரதிபலிப்புகளிலிருந்து, இந்த அறிக்கை அவர்களுக்கு ஒரு மனோரீதியிலான உற்சாகத்தை அளித்துள்ளதைக் காண முடிகிறது. ஐ.நாவின் உத்தியோகபூர்வமான அமைப்பு எதனதும் தடையேதுமின்றி, ஒரு இறைமையுள்ள நாட்டுக்கு எதிராக பாரிய குற்றச்சாட்டுகளை முன்வைக்கும் இந்த அதிகாரபூர்வமற்ற அறிக்கையை வெளியிட்டதின் மூலம், இலங்கையிலும், இந்தப் பிராந்தியத்திலும் பதற்றமான ஒரு சூழ்நிலையை அது உருவாக்கியுள்ளது. இந்த விடயத்தில் ஐ.நா செயலாளர் நாயகத்தின் பொறுப்பற்றதும், மதிப்பற்றதுமான பாத்திரத்தை கம்யூனிஸ்ட் கட்சி கண்டிக்கிறது.

மேற்கத்தைய சக்திகள் தமது சர்வதேச தந்திரோபாயங்களைப் பலப்படுத்துவதற்காகவும், பூகோள அரசியல் நலன்களை அடைவதற்காகவும், தம்மைப் பயன்படுத்துவதை, சமாதானத்தை நேசிக்கின்ற தமிழ் மக்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது என கம்யூனிஸ்ட் கட்சி வேண்டிக் கொள்கிறது.

தமிழ் மக்களின் நியாயமான மனக்குறைகள், உரிமைகள் மற்றும் அபிலாசைகளை பொறுப்புள்ள வகையில் கவனத்தில் எடுத்து, வரலாறு வழங்கியுள்ள இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, தேசிய இனப்பிரச்சினைக்கு இறுதியான தீர்வொன்றைக் காண வேண்டுமென, இந்த நாட்டிலுள்ள சகல தேசபக்த மற்றும் முற்போக்கு சக்திகளை கம்யூனிஸ்ட் கட்சி வேண்டிக் கொள்கிறது.

*

# உண்மையை உடைத்த தமிழக மீனவர்கள்!

பி.பி.சி தமிழ் செய்தியாளர் சுவாமிநாதன், தமிழக மீனவர்கள் சிலரைப் பேட்டி கண்ட செய்தி 2011 ஏப்ரல் 07ம் திகதி அதன் தமிழ் சேவையில் ஒலிபரப்பானது. அந்தப் பேட்டியில் தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்பரப்பின் மீதான தமது அத்துமீறல்களை வெளிப்படையாக ஒத்துக்கொண்டு ‘வாக்குமூலம்’ அளித்தனர்.

அவர்கள் கூறும் போது, தாம் தெரிந்து கொண்டே இலங்கைக் கடல் பகுதிக்குள் ஊடுருவுவதாகவும், அதற்குக் காரணம், இலங்கைக் கடல் பகுதிக்குள் தான் பெரிய தொகையான மீன் வகைகள் கிடைப்பதாகவும் கூறினர்.

பி.பி.சி பேட்டி கண்டவர்களில், அண்மையில் பருத்தித்துறைக் கடலில் ஊடுருவியபோது வடமராட்சி மீனவர்களால் கைது செய்யப்பட்டு, பின்னர் இந்திய அரசின் தலையீட்டினால் விடுதலை செய்யப்பட்ட 118 பேரில் இருந்த ஒருவரும் அடங்கியிருந்தார். அவர் கருத்துக் கூறுகையில், தாம் கைது செய்யப்பட்ட போது தம்மை இலங்கைப் பொலிசார் நல்ல முறையில் நடாத்தியதாகவும், ஆனால் தம்மைக் கைது செய்த வடபகுதி மீனவர்கள் தம்மீது தாக்குதல் நடாத்தியதாகவும் கூறினார்.

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க...

# காலத்தால் அழிக்க முடியாத மேதினத்தின் புரட்சிகர உணர்வு

**சுப்பராவ்**

மேதினம் என்பது இன்று உலகம் முழுவதும் நினைவுகூரப்படும் ஒரு தினமாகிவிட்டது. அதற்காக பல நாடுகளில் மே 1ம் திகதி பொது விடுமுறை தினமாகவும் அனுஸ்டிக்கப்படுகிறது. அது உருவான காலத்திலும், அதற்குப் பின்னரான பல தசாப்தங்களாகவும் கம்யூனிட்டுகளால் மட்டும் நினைவுகூரப்பட்டு வந்த அந்தத் தினம், இன்று அனைவராலும் நினைவுகூரப்படும் அளவுக்கு அதன் சிறப்புத்தான் என்ன?

இந்தத் தினத்துக்கு அடிகோலிய சம்பவம், அமெரிக்காவிலுள்ள இலினோயிஸ் மாகாணத்தின் தலைநகராகத் திகழும் சிக்காக்கோ நகரில், 1886ம் ஆண்டில் (125 ஆண்டுகளுக்கு முன்பு) நடந்தது. இருப்பினும் அமெரிக்கா, கனடா போன்ற வட அமெரிக்க நாடுகளில், இத்தினத்தை பொது விடுமுறை தினமாக அறிவிக்க, இன்றுவரை அந்நாட்டு முதலாளித்துவ அரசுகள் தயாராகவில்லை. உலகத் தொழிலாளி வர்க்கத்துடன் அந்நாட்டுத் தொழிலாளர்கள் சேர்ந்துவிடக்கூடாது என்பதற்காக, பிறிதொரு தினத்தை அந்நாட்டு அரசுகள் 'தொழிலாளர் தினமாக' (Labour Day என்ற பெயரில்) அறிவித்து விடுமுறையும் வழங்கியுள்ளன!

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தினத்துக்கு அடிகோலிய சம்பவம் இதுதான். 1886ம் ஆண்டு சிக்காக்கோ நகரில் இருந்த தொழிலாளர்கள் 3 நாட்கள் பொதுவேலை நிறுத்தம் ஒன்றை மேற்கொண்டனர். வேலை நிறுத்தத்தின் நோக்கம், அன்று அமுலிலிருந்த ஒரு நாளைக்கு 12 மணி முதல் 18 மணி வரையிலான வேலை நேரத்தை 8 மணித்தியாலங்களாகக் குறைக்க வேண்டுமென்பதே. இந்த வேலை நிறுத்தத்திற்கு தொழிலாளர்கள் மட்டுமின்றி, கலைஞர்கள், வர்த்தகர்கள், குடியேற்றவாசிகள் என அனைத்துத் தரப்பினரின் ஆதரவும் இருந்தது.

இந்த வேலை நிறுத்தத்தை முறியடிப்பதற்காக, முதலாளிகளின் பாதுகாவலர்களான பொலிசார் சுட்டதில், Mccomick Harvesting Machine Co என்னும் தொழிற்சாலையைச் சேர்ந்த 4 தொழிலாளர்கள் இறந்து போயினர். பொலிசாரின் இந்த மிலேச்சத்தனத்தைக் கண்டித்து, அடுத்த தினம் அங்குள்ள Hay Market Square ல் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது. அந்த ஊர்வலத்தில் பங்குபற்றிய தொழிலாளர்கள், இறந்துபோன தமது சகாக்களின் உடலிலிருந்து சிந்திய செங்குருதியை தமது மேலாடைகளில் (சேர்ட்டுகளில்) தோய்த்து எடுத்து அதைத் தமது கொடிகளாகக் கைகளில் ஏந்திச் சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டம் மீதும் பொலிசார் காட்டுமிராண்டித்தனமாகச் சுட்டதில் 12 தொழிலாளர்கள் இறந்ததுடன், பொதுமக்களின் தாக்குதலில் ஒரு பொலிசாரும் இறந்து போனார். அதன்பின்னர் அங்குள்ள நீதிமன்றமொன்று கிளர்ச்சியைத் தூண்டினார்கள் என்று குற்றஞ்சாட்டி, 4 பேருக்கு பகிரங்கத் தூக்குத் தண்டனை வழங்கியது. இந்தச் சம்பவத்தில் இறந்து போன தொழிலாளர்கள் பின்னர், 'ஹெமார்க்கட் தியாகிகள்' (Haymarket Martyers) அழைக்கப்படலாயினர்.



அமெரிக்க முதலாளி வர்கத்தினதும், அவர்களது ஏவல் நாய்களான பொலிசாரினதும் இந்த மிலேச்சத்தனமான நடவடிக்கைகள் யாவும் உலகம் முழுவதிலுமிருந்த தொழிலாளி வர்க்கத்தையும், உழைக்கும் மக்களையும் கொதித்தெழ வைத்தது. சிக்காக்கோ மேதினத் தியாகிகளின் கோரிக்கையை எதிரொலித்து, உலகத் தொழிலாளி வர்க்கம் தத்தமது நாடுகளிலும் 8 மணி நேர வேலை வேலையைக் கோரி ஆர்ப்பாட்டங்களில் இறங்கியது.

இந்த சம்பவங்கள் நடைபெற்ற காலத்தில், மார்க்சிய தத்துவத்தின் பிதாமகர்களில் ஒருவரான கார்ல் மாக்ஸ் இறந்துவிட்டிருந்தார் (1883 மார்ச் 17). அவரது இணைபிரியாத் தோழரான பிரெடரிக் ஏங்கெல்ஸ் உயிருடன் இருந்ததுடன், அவர் இரண்டாவது சர்வதேச

*கம்யூனிஸ்ட் அகிலத்தின் தலைவராகவும் இருந்தார். அவரது தலைமையில் கூடிய அகிலம், மேதினத் தியாகிகளுக்கு தமது வீர வணக்கத்தைச் செலுத்தியதுடன், அவர்கள் குருதி சிந்திய மே 1ம் திகதியை சர்வதேசத் தொழிலாளர் தினமாக – மேதினமாக அனுஸ்டிப்பதெனவும் தீர்மானம் நிறைவேற்றியது. அத்துடன் உலகம் முழுவதிலும் உள்ள தொழிலாளி வர்க்கத்தின கொடி, இனிமேல் சிவப்பு நிறக்கொடி என்றும் பிரகடனம் செய்தது.*

*அன்றிலிருந்து  உலகம் முழுவதிலுமுள்ள தொழிலாளிவர்க்கம் சகலவிதமான அடக்குமுறைகளையும் மீறி, மேதினத்தின் புரட்சிகர உணர்வுகளை வருடாவருடம் மே 1ம் திகதி நினைவுகூர்ந்து வருகின்றது. ஆரம்பத்தில் முதலாளி வர்க்கமும், அவர்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் முதலாளித்துவ அரசுகளும் தொழிலாளர்கள் மேதினத்தை நினைவுகூராதபடி தடுப்பதற்கு பல வழிகளிலும் அடக்குமுறைகளைக் கையாண்ட போதிலும், பின்னர் அது முடியாமல் போக, தொழிலாளர்களைச் திசைதிருப்ப தாமும் அத்தினத்தை நினைவுகூருவது போலப் பாசாங்கு செய்து, அத்தினத்தின் புரட்சிகரத் தன்மையை இல்லாதொழித்து, அதை ஒரு கேளிக்கை தினமாக்க முயற்சி செய்து வருகின்றனர்.*

*எமது தாய்நாடான இலங்கையைப் பொறுத்த வரையிலும் கூட, மேதினம் உருவான காலப்பகுதியில் ஆட்சியிலிருந்த பிரித்தானிய ஏகாதிபத்தியவாதிகள், இலங்கைத் தொழிலாளி வர்க்கம் மேதினத்தை நினைவுகூர அனுமதிக்கவில்லை. கடும் அடக்குமுறைகளின் கீழேயே இலங்கைத் தொழிலாளி வர்க்கம் அதை நினைவுகூர்ந்து வந்தது. 1948 பெப்ருவரி 4ம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்த பின்னரும்கூட, ஆட்சிக்கு வந்த ஏகாதிபத்தியவாதிகளின் அடிவருடியான முதலாளித்துவ பிற்போக்குவாத ஐக்கிய தேசியக் கட்சி அரசு, தொழிலாளர்கள் மேதினம் கொண்டாட அனுமதிக்கவில்லை. 'மேதினம் என்பது ஒரு வெளிநாட்டு விடயம், அதற்கு இலங்கையில் விடுமுறை வழங்க முடியாது' என்று ஐ.தே.க நியாயம் கூறி வந்தது.*

*அதன் பின்னர் தொழிலாளர்கள் தொடர்ச்சியாக நடாத்தி வந்த போராட்டங்கள் காரணமாக, 1956ல் ஆட்சிக்கு வந்த எஸ்.டபிள்யூ.ஆர்.டீ. பண்டாரநாயக்க தலைமையிலான ஏகாதிபத்திய விரோத அரசாங்கம், தொழிலாளிவர்க்கத்தின் பல கோரிக்கைகளை ஏற்று நிறைவேற்றியதுடன், மேதினத்தை அங்கீகரித்து அன்றைய தினத்தை அரசாங்க – வங்கி – வர்த்தக விடுமுறை தினமாகவும் அறிவித்தது. அதன் பின்னர் முதலாளித்துவ ஐ.தே.கவிலிருந்து இனவாத தமிழ் கட்சிகள் வரை, எல்லோருமே மேதினத்தை ஒரு களியாட்ட தினமாக மாற்றுவதற்கு முயற்சி செய்து வருகின்றனர்.*

*அதேவேளையில், வாய்ப்பு கிடைக்கும் போது மேதினத்தை நடாத்தவிடாமல் தடைசெய்யவும் முயன்றிருக்கின்றனர். 1965 – 1970 வரையிலான ஐ.தே.க – தமிழரசுக்கட்சி – தமிழ்காங்கிரஸ் கட்சி கூட்டாட்சி நிலவிய காலத்தில், 1966 மற்றும் 1969ம் ஆண்டுகளில் மேதினத்தை நடாத்தவிடாமல் அவர்களது அரசு தடைசெய்ததும், அதை எதிர்த்து தொழிலாளர்கள் தடையை மீறி ஊர்வலம் போனதும் வரலாறு.*

*என்னதான் முதலாளித்துவ, இனவாத சக்திகள் மேதினத்தை தடைசெய்யவோ, திசைதிருப்பவோ அல்லது இனவாத அடிப்படையில் தொழிலாளி வர்க்கத்தைக் கூறுபோடவோ முயன்றாலும், அதையெல்லாம் உடைத்தெறிந்து, தொழிலாளி வர்க்கம் தனது வர்க்க ஐக்கியத்தை நிலைநாட்டும் என்பதை, உலகம் முழுவதும் வருடாவருடம் நடைபெறும் மேதின ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்து நிரூபித்து வருகின்றன.*

***"கோடிக்கால் பூதமடா, தொழிலாளி கோபத்தின் ரூபமடா"***

***- தோழர் ப.ஜீவானந்தம்***

*

'சொத்து வைத்திருக்கும் பெரியவர்கள் நன்றாக இருக்கட்டும்! எங்கள் அணியில் மக்கள் படை இருக்கிறது. உலகிலுள்ள சான்றோர்கள், சிந்தனையாளர்கள் பலர் எங்கள் பக்கம் திரும்பிக்கொண்டிருகிறார்கள். உதாரணத்துக்கு, பார்மெனில் இருந்து நண்பர் பிரெட்ரிக் எங்கெல்ஸ் வந்திருக்கிறார். இங்கிலாந்து தொழிலாளர்களைப் பற்றி அவர் ஒரு புத்தகம் எழுதியிருக்கிறார். உற்பத்தியாளர்களைச் சாடி தொழிலாளர்களை அவர் ஆதரிக்கிறார். அவருடைய சொந்த தந்தையே ஜெர்மனியிலும் பிரிட்டனிலும் ஆலைகள் வைத்திருக்கிறார் என்றால் பார்த்துக்கொள்ளுங்கள். அவர் இப்போது தன் குடும்பத்தினருடன் அவ்வளவாக ஒன்று கலக்கவில்லை. அவருக்கு இறை நம்பிக்கை இல்லை... ஆனால் அவர் மிக நல்லவர், கருணையுள்ளம் கொண்டவர். அசாதாரணமான புத்திக்கூர்மையும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்யும் நோக்கும் கொண்டவர். உழைக்கும் மக்களுக்காக அவர் பகலும் இரவும் உழைத்துக்கொண்டிருக்கிறார்.'

- எங்கெல்ஸ் பற்றி ஜார்ஜ் வீர்த் என்னும் ஜெர்மனிய கவிஞர்

# இலங்கை ஆசியப் பொருளாதாரத்தின் பிரகாசிக்கும் நட்சத்திரம்!

## அமெரிக்க 'FOX NEWS' புகழாரம்

இலங்கை செழுமையான கலாச்சாரப் பாரம்பரியத்தையும், 2500 ஆண்டுகால எழுத்து வடிவிலான வரலாற்றையும் கொண்ட ஒரு தீவுத் தேசமாகும். இது சிங்களவர், தமிழர், முஸ்லீம்கள், பறங்கியர், மலேக்காரர் என பல்வேறு இன மக்களைக் கொண்ட, 21 மில்லியன் சனத்தொகை கொண்ட ஒரு நாடாகும். இது ஆசியாவின் பழமையான ஜனநாயகத்தையும், மத சகிப்புத் தன்மை என்ற அச்சாணியை ஆதாரமாகவும் கொண்டுள்ளது.

இலங்கை பூகோளரீதியிலான கப்பல் போக்குவரத்து மார்க்கத்தில் அமைந்திருப்தால் அது, ஆசியப் பொருளாதாரத்தின் பிரகாசிக்கும் நட்சத்திரமாகத் திகழ்கின்றது. மேற்கிற்கும் கிழக்குக்கும் இடையிலான சர்வதேச வர்த்தகத் தொடர்பில் இலங்கை முக்கிய பங்கு வகிக்கின்றது.

இந்த நாட்டின் பிரபலமான ஏற்றுமதிப் பொருட்களாக உலகப் பிரசித்தி பெற்ற தேயிலை, தயாரிக்கப்பட்ட ஆடைகள், ரப்பர் பொருட்கள், ஆபரணங்கள், இரத்தினக் கற்கள், தென்னை உற்பத்திகள், வாசனைப் பொருட்கள் மற்றும் பல்வேறு வகையான மூலிகைகள் என்பன இருக்கின்றன.

இலங்கையின் பங்குச் சந்தை அண்மைய ஆண்டுகளில் உலகின் சிறந்த பரிமாற்றங்களை வெளிப்படுத்தியுள்ளது. 2010ல் 7.2 வீதமாக இருந்த அதன் பொருளாதார வளர்ச்சி, தற்பொழுது மேலும் வளர்ச்சியை நோக்கிச் செல்கின்றது. உலகப் பொருளாதாரம் வீழ்ச்சியைக் காட்டி நின்ற நேரத்தில், இலங்கையின் பொருளாதாரம் வளர்ச்சியை நோக்கி நின்று, மற்றவர்களுக்கு உதாரணமாக இருந்துள்ளது.

சுற்றுலாத்துறை இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் முக்கியமான பங்கை வகிப்பதுடன், அந்நாடு உலகத்தரம் வாய்ந்த சுற்றுலாத்தலமாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இயற்கை அழகுடன் கூடிய அதன் உலர் வலயக் காடுகள், கடற்கரைகள், மலைகள் மற்றும் கலாச்சாரப் பாரம்பரியம் என்பன அந்நாட்டுக்கு விஜயம் செய்த பயண எழுத்தாளர்களால் புகழ்ந்து எழுதப்பட்டுள்ளன.

2010 ஜனவரியில், 'நியூயோர்க் ரைம்ஸ்' பத்திரிகை இலங்கையை உயர்ந்த சுற்றுலாத் தலமாக பெயரிட்டது. அந்த வருடத்தின் மிகச் சிறந்த பயணத்துக்கான 25 நாடுகளில் ஒன்றாக, இலங்கையை National Geographic சஞ்சிகையும் தேர்வு செய்தது.

2009 மே மாதத்தில் இலங்கை, தமிழீழ விடுதலைப் புலிகள் என்ற பயங்கரவாத அமைப்புக்கு எதிராக பல தசாப்தங்களாக நீடித்த யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தது. இது பற்றி அமெரிக்க செனட் சபையின் அறிக்கையொன்று தெரிவிக்கையில், 'ஒருபோதும் தோற்கடிக்க முடியாமல் இருந்த பயங்கரவாத இயக்கமொன்றுக்கு எதிரான இந்த வெற்றி, வரலாற்றில் சில தடவைகள் மட்டும் நிகழ்ந்த வெற்றிகளில் ஒன்றாக இருக்கின்றது' எனக் குறிப்பிட்டுள்ளது.

இலங்கை இப்பொழுது மீண்டும் சமாதானத்துக்கும், செழிப்புக்கும் திரும்பியுள்ளது. அரசாங்கம், வெளிநாடுகள் வழங்கிய மில்லியன் கணக்கான டொலர்களின் உதவியுடன், போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளின் இயல்பு வாழ்க்கையை மீளுருவாக்குவதிலும், அபிவிருத்தியை ஏற்படுத்துவதிலும் ஈடுபட்டு வருகின்றது. வீதிகளும் மற்றும் உள்கட்டமைப்பு வசதிகளும் மீள் கட்டுமானம் செய்யப்படுவதுடன், சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இலங்கை 1931ல் சர்வஜன வாக்குரிமையைப் பெற்றுக் கொண்டதுடன், 1948ல் பிரிட்டிஸாரிடமிருந்து சுதந்திரத்தையும் பெற்றது. ஜனநாயக பாரம்பரியங்கள் மற்றும் அரசியல் சுதந்திரம் என்பனவற்றின் தொடர்ச்சியாக, 1983ன் பின்னர் முதற்தடவையாக, 2010ல் நாடு தழுவிய ரீதியில் தேர்தல்கள் நடாத்தப்பட்டன.

2010ல் இலங்கையர்கள் இரு தடவைகள் வாக்களிப்புக்குச் சென்றனர். முதலில் ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்காகவும், பின்னர் புதிய பாராளுமன்றத்துக்காகவும் அவர்கள் வாக்களித்தார்கள். இலங்கை மக்கள் ஜனாதிபதி ராஜபக்சவை பெரும் வாக்கு வித்தியாசத்தில் மீண்டும் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுத்தனர். அத்துடன் பாராளுமன்றத் தேர்தலில் ஜனாதிபதியின் கட்சிக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை கிடைக்கச் செய்ததின் மூலம், அவரது கொள்கைகளுக்கு பெரும் ஆதரவு வழங்கியுள்ளனர்.

2009 மே மாதத்தின் பின்னர் இலங்கையில் ஏற்பட்டு வரும் மாபெரும் அரசியல், சமூக, பொருளாதார மாற்றங்கள் அனைத்து இலங்கையர்களுக்கும் பலாபலன்களையும், புத்துணர்ச்சியையும் கொடுத்துள்ளது. இலங்கை, அனைவருக்கும் சமாதானம், ஒருமைப்பாடு, செழிப்பு என்பனவற்றுக்காக தன்னை அர்ப்பணிப்பதின் மூலமாக, ஆசியாவின் ஆச்சரியமாக அந்நாட்டை மாற்ற முடியும்.

*

---



### இலங்கையில் 30 வருடங்களின் பின் மீண்டும்

# சோசலிச வியட்நாமின் தூதரகம்

இலங்கையில் ஏறத்தாழ 30 வருடங்களின் பின்னர், வியட்நாமிய சோசலிசக் குடியரசின் தூதுவராலயம் அண்மையில் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட வியட்நாமியத் தூதுவர் Ton Sinh Thanh தனது நியமனப் பத்திரங்களை ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவிடம் கையளித்த பின்னர் ஊடகவியலாளர்களிடம் பேசுகையில், "70 களில் இலங்கையில் எமக்கு தூதரகமொன்று இருந்தது. ஆனால் அது பயங்கரவாத நிலைமைகள் காரணமாகப் பின்னர் மூடப்பட்டது. தற்போது இலங்கையில் போர் முடிவுற்று இலங்கையும் வியட்நாமும் புதிய சகாப்தத்தில் பிரவேசித்துள்ளதால், மீண்டும் தூதரகம் திறக்கப்பட்டுள்ளது" என்று குறிப்பிட்டார்.

ஐ.நா செயலாளர் நாயகம் இலங்கையின் போர்க் குற்றங்கள் சம்பந்தமாக நியமித்த நிபுணர் குழுவின் அறிக்கை பற்றி தூதுவர் குறிப்பிடுகையில், 'இலங்கைக்கு தமது அரசாங்கத்தின் ஆதரவைத் தெரிவித்ததுடன், போருக்குப் பிந்திய நிலைமைகளை வெளியார் தலையீடின்றி இலங்கையர்களே தமக்குள் தீர்த்துக் கொள்ள வேண்டுமென்றும், சர்வதேச சமூகம் இலங்கையின் ஒருமைப்பாட்டுக்கும் புனர்நிர்மாணத்துக்கும் நிச்சயம் உதவ வேண்டும்' எனவும் குறிப்பிட்டார்.

1960களில் அமெரிக்க ஏகாதிபத்தியம் முதலில் வியட்நாமையும், பின்னர் லாவோஸ், கம்போடியா என முழு இந்தோ – சீன தீபகற்பத்தையும் ஆக்கிரமித்த போது, முழு இலங்கை மக்களும் வியட்நாமிய தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு பல்வேறு வழிகளில் ஆதரவளித்தனர் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வடக்கு கிழக்கிலும் வியட்நாம் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டங்களை ஆதரித்து பல பொதுக்கூட்டங்களும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியால் நடாத்தப்பட்டது. ஆனால் தமிழ் மக்களின் தேசிய விடுதலைக்காகப் போராடுவதாக சொல்லி வந்த தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழ் காங்கிரஸ் கட்சியோ வியட்நாம் மக்களின் போராட்டத்தை ஆதரித்து ஒரு சிறு அறிக்கை தன்னும் ஒருபோதும் விடுக்கவில்லை.

ஆனால் 1975ல் தென் வியட்நாம் உட்பட முழு இந்தோ சீனமும் அமெரிக்க ஆக்கிரமிப்பிலிருந்து விடுவிக்கப்பட்ட போது, தமிழரசுக் கட்சியின் தலைவர் 'தந்தை' எஸ்.ஜே.வி.செல்வநாயகம் தூக்கத்திலிருந்து திடீரென விழித்தெழுந்து, "தென் வியட்நாம் தலைநகர் சைகோன் நகரில் வாழ்ந்த 5000 தமிழர்களுக்கு என்ன நடந்தது? எனக் கேள்வி எழுப்பி, தனது கம்யூனிச எதிர்ப்பு, அமெரிக்க சார்பு நிலைப்பாட்டைப் பிரகடனப்படுத்திக் கொண்டார்.

கொழும்பில் மீண்டும் வியட்நாம் தூதரகம் திறந்து வைக்கப்பட்டமை, இலங்கை – வியட்நாம் உறவுகளை மேலும் வளர்ப்பதுடன், இலங்கையின் ஏகாதிபத்திய எதிர்ப்பு நிலைப்பாட்டுக்கு வலுவூட்டுவதாகவும் அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

---

# தமிழகத்தின் புதிய முதல்வராக ஜெயலலிதா

**2**34 தொகுதிகளைக் கொண்ட தமிழக சட்டசபையில் ஜெயலலிதா தலைமையிலான அதிமுக 160 தொகுதிகளில் போட்டியிட்டு, 146 தொகுதிகளைக் கைப்பற்றி பெருவெற்றியீட்டியுள்ளது. கருணாநிதி தலைமையிலான திமுக 119 தொகுதிகளில் போட்டியிட்டு 23 தொகுதிகளிலும், காங்கிரஸ் கட்சி 63 தொகுதிகளில் போட்டியிட்டு 5 தொகுதிகளிலும் மட்டும் வெற்றிபெற்று படுதோல்வியைத் தழுவியுள்ளன. நடிகர் விஜயகாந்த் தலைமையிலான தேதிமுக 41 தொகுதிகளில் போட்டியிட்டு, 29 தொகுதிகளைக் கைப்பற்றி தமிழக சட்டசபையில் இரண்டாவது பெரிய கட்சியாக வந்துள்ளது.

தமிழக சட்டசபைத் தேர்தல் தொடர்பாக தமிழக ஊடகங்களில் வெளிவந்த சில கருத்துகள் கீழே தரப்படுகின்றன.

✵✵

"இதை ஜெயலலிதா தலைமையிலான அஇஅதிமுக கூட்டணியின் அமோக வெற்றி என்று கூறுவதைவிட, திமுக தலைமையிலான கூட்டணிக்கு எதிராக எழுந்த மக்களின் மௌனப் புரட்சி என்று கூறுவதுதான் சரியாக இருக்கும். தமிழகம் முழுவதும் திமுகவுக்கு எதிராக ஒரே மாதிரியான மனோபாவம் காணப்பட்டிருப்பது புதியதொன்றும் அல்ல. தமிழக மக்கள் கடந்த 2006 சட்டப்பேரவைத் தேர்தலைத் தவிர, ஏனைய தேர்தல்களில் எல்லாம் ஏதாவது ஒரு கட்சிக்குப் பேராதரவு அளித்துத் தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்க வாக்களித்து வந்திருக்கிறார்கள் என்பதுதான் சரித்திர உண்மை."

"தேர்தல் முடிவுகள் திமுகவுக்கும் அதன் தோழமைக் கட்சிகளுக்கும் தரப்பட்டிருக்கும் தண்டனை என்றால், திறமையான அதேநேரத்தில் நேர்மையான நிர்வாகம், மக்களின் உணர்வுகளையும், பிரச்னைகளையும் பிரதிபலிக்கும் ஆட்சி, கட்டுப்பாட்டில் இருக்க வேண்டிய குடும்ப ஆதிக்கமும், தலையீடும் இவையெல்லாம் இல்லாமல், கேவலம், பணத்தையும், இலவசங்களையும் காட்டி இனிமேலும் யாரும் எங்களை ஏமாற்ற முடியாது என்பது அதிமுகவுக்கும், மூன்றாவது முறையாக ஆட்சி அமைக்க இருக்கும் செல்வி. ஜெயலலிதாவுக்கும் அவர்கள் உணர்த்தும் பாடம்."

**– தினமணி தலையங்கம்**, 14.05.2011

✵✵

"தமிழகத்தில் அ.தி.மு.க வெற்றி பெறும் என்று கணித்த எக்சிட் போல் கணிப்புகள் கூட இந்த பிரம்மாண்ட வெற்றியை கணிக்க முடியவில்லை. இதுவரை எங்கள் கணிப்புதான் தமிழக தேர்தல் முடிவுகளோடு ஒத்துப் போனது என்று மார்தட்டிய நக்கீரன் பத்திரிகை இப்போது மூக்குடைபட்டிருக்கிறது. மொத்தத்தில் தமிழக மக்களின் முடிவுகளை துல்லியமாக எவராலும் கணிக்க முடியவில்லை. ஆனால் பொதுவில் அ.தி.மு.க வெற்றி பெறும் என்பதை பொதுமக்கள் முதல் பத்திரிகையாளர்கள், சில பதிவர்கள் வரை பேசி வந்தனர். அவர்களும் கூட இந்த அளவு வெற்றியை கணித்திருக்கவில்லை."

"தி.மு.கவின் மீது மக்களுக்கு இருந்த அளவு கடந்த கோபமே இப்படி வெளிப்பட்டிருக்கிறது. ஒரு வேளை இந்தத் தேர்தலில் ஜெயா தோற்று தி.மு.க வெற்றி பெற்றிருந்தால், முழு தமிழகத்தையும் மொட்டையடித்திருப்பார்கள். அதையெல்லாம் மக்கள் எண்ணிப் பார்த்திருக்க வேண்டும். ஆக மொத்தம் அ.தி.மு.கவின் வெற்றி என்பது எதிர்மறையில் கிடைத்த ஒன்றாகும். அதில் அவர்களது சொந்த பங்கு எதுவும் இருக்கவில்லை."

**– வினவு இணையத்தளம்**

✵✵

"இரண்டு லோக்சபா தேர்தலிலும், 2006ம் ஆண்டு சட்டசபை தேர்தலிலும், தி.மு.க, தொடர்ந்து வெற்றி பெற்றது. ஆனால், நடந்து முடிந்த தேர்தலில், தி.மு.க., மிகப் பெரிய அதிர்ச்சியை சந்தித்திருக்கிறது. தி.மு.க.,வில், 'தென்மண்டல அமைப்பு' என்ற பிரிவு அறிவிக்கப்பட்டது. அதன் அமைப்பாளராக, கருணாநிதியின் மகன் அழகிரி அறிவிக்கப்பட்டார். உண்மையிலேயே இந்த ஏற்பாட்டை, தி.மு.க., தொண்டர்கள் விரும்பவேயில்லை. ஆனால், தென்மாவட்டங்களில், தி.மு.க., வெற்றி பெறுவதற்கு, அழகிரியின் தலைமை தேவை என்று கூறினர். தென்மண்டலத்திற்காக, மதுரையில் தனி ராஜாங்கம் நடைபெறுகிறது என்ற தோற்றம் வலுப்பெற்று வந்தது. அதை தடுப்பதற்கோ, கட்டுப்படுத்துவதற்கோ முடியவில்லை. அதன் எதிரொலியை, இந்த தேர்தலில் பார்த்தோம். மதுரை நகரில் மட்டுமல்ல, மாவட்டத்தின், 10 தொகுதிகளிலும், தி.மு.க., தோல்வி கண்டது."

**– தினமலர்**

முன்பக்கத்தொடர்ச்சி..

தமிழர்களின் மூத்த அரசியல் கட்சியான தமிழ் காங்கிரஸ் முன்பு 'ஐம்பதுக்கு ஐம்பது' என்ற கொள்கையை தனது திட்டமாக வைத்திருந்தது. பின்னர் அதிலிருந்து பிரிந்து சென்றவர்களால் உருவாக்கப்பட்ட தமிழரசுக்கட்சி 'சமஸ்டி' கொள்கையை முன்வைத்தது. அதன் பின்னர் இந்த இரண்டு கட்சிகளும் சேர்ந்து உருவாக்கிய தமிழர் விடுதலைக் கூட்டணி 1976ம் ஆண்டு தனது வட்டுக்கோட்டை மாநாட்டில் 'தனித் தமிழ் ஈழம்' என்ற கொள்கையைப் பிரகடனம் செய்தது. அந்தக் கொள்கையை வென்றெடுப்பதற்காக கடந்த 30 ஆண்டுகளாக ஆயுதப் போராட்டம் நடாத்தப்பட்டு, அதனால் தமிழ்மக்களுக்கு வரலாறு காணாத அழிவுகள் ஏற்பட்டு, அதுவும் 2009 மே மாதத்துடன் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது.

இந்தச் சூழ்நிலையில், தவிர்க்க முடியாத ஒரு நிலையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட முன்வந்தது. ஆனால் அவர்கள் அரசாங்கத்திடம் என்ன கோரிக்கைகளை முன்வைத்துள்ளார்கள் என்பது தமிழ் மக்களுக்கோ, இந்தப் பிரச்சினையில் அக்கறையுள்ளவர்களுக்கோ இன்றுவரை தெரியவில்லை.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் சில பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்னமும், சுயநிர்ணய உரிமை (அவர்கள் நினைப்பில் அது தனிநாடு) என்று பேசி வருகின்றனர். இன்னும் சிலர் சமஸ்டி பற்றிப் பேசுகின்றனர். இடையிடையே 13வது திருத்தச் சட்டத்தின் கீழ் காணி, பொலிஸ் அதிகாரம் பெறுவது பற்றியும் பேசுகின்றனர். கூடவே ஏகப்பிரதிநிதித்துவம், சாத்வீகப் பாதை சரிவராவிட்டால் மாற்றுப்பாதை (அதாவது வன்முறை) என்றும் பேசுகின்றனர். 'அரசுடனான பேச்சுவார்த்தை இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காணவே' என்றும், 'இல்லையில்லை முதலில் உடனடிப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவே' என்றும் பல்வேறு விதமான விளக்கங்களையும் அளித்து வருகின்றனர்.

இதையேதான் புலிகளும் முன்பு செய்தார்கள். அரசு இனப்பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் தீர்வைக் காணுவதற்குப் பேசக் கூப்பிட்டால், உடனடிப் பிரச்சினை பற்றிப் பேசுவோம் என்பார்கள், உடனடிப் பிரச்சினை பற்றிப் பேசுவோம் என அழைத்தால், நிரந்தரத் தீர்வு பற்றிப் பேசுவோம் என்பார்கள். அவர்களது முழு நோக்கமும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதைவிட, பேச்சுவார்த்தை மூலம் காலத்தை இழுத்தடித்து யுத்தத்தைத் தொடருவதாகவே இருந்தது. தமிழ் தேசியக் கூட்டமைப்பு யுத்தம் செய்யாவிடினும், அவர்களும் காலத்தை இழுத்தடித்து இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு ஏற்படாமல் பார்த்துக் கொண்டு, 'பிச்சைக்காரனின் புண் போல்' அதைக் காட்டிக்கொண்டு, தமது இனவாத அரசியலை தொடர்ந்து முன்னெடுப்பதே அவர்களது நோக்கமாகும்.

காலம் காலமாக அவர்கள் மேற்கொண்டு வரும் இந்தக் கபட அரசியலை, தொடர்ந்து மேற்கொள்ள தமிழ் மக்கள் அனுமதிக்கக்கூடாது. முதலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் இனப்பிரச்சினைத் தீர்வுக்கான கொள்கை என்னவென்பதை வெளிப்படுத்தும்படி, பொதுமக்கள் அவர்களை நிர்ப்பந்திக்க வேண்டும். இல்லாவிடின் அவர்கள் பேச்சுவார்த்தை என்று நாடகம் ஆடிவிட்டுப் பின்னர் அரசாங்கம் ஒன்றும் செய்யவில்லை என்ற, வீராவேசப் பேச்சுக்களுடன் மீண்டும் வாக்குக் கேட்டு மக்கள் முன் வந்து நிற்பார்கள்.

அதேவேளையில், அரசாங்கம் தமிழ் மக்களுக்கு தான் என்ன தீர்வை வழங்கப் போகின்றது என்பதை தெளிவாகவும் விரைவாகவும் முன்வைக்க வேண்டும். அத்துடன் தமிழ் தேசியக் கூட்டமைப்புதான தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதி என்ற கவைக்குதவாத குப்பைக் கருத்தை தூக்கி வீசிவிட்டு, தமிழ் மக்களால் தெரிவு செய்யப்பட்ட (பாராளுமன்ற – உள்ளூராட்சி சபை) பிரதிநிதிகளுடன் பேசி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உடனும் முன்வர வேண்டும்.

அதன் மூலமே, காலம் காலமாக தமிழ் மக்களை இனவாதச் சேற்றுக்குள் அமிழ்த்தி வைத்திருக்கும் அழிவுச் சக்திகளிடமிருந்து அவர்களை நிரந்தரமாக மீட்டெடுக்க முடியும்.
*

---

9ம் பக்கத் தொடர்ச்சி..
கச்சதீவை இலங்கையிடமிருந்து மீளப் பெறுவது சம்பந்தமாக தமிழக அரசியல் கட்சிகள் பேசி வருவது குறித்து பி.பி.சி செய்தியாளர் வினவிய போது பதிலளித்த தமிழக மீனவர்கள், அது ஒருபோதும் சாத்தியமாகாது என்று தெரிந்தும், அரசியல் நோக்கங்களுக்காக அரசியல்வாதிகள் அவ்வாறு பேசி வருவதாகக் குறிப்பிட்டனர்.

இந்தப் பேட்டி தமிழகத் தேர்தல் நடைபெறுவதற்கு சில நாட்கள் முன்பதாக எடுக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.
*

---

# கனடியப் பொதுத்தேர்தலில் கொன்சவேடிக் கட்சி பெரும் வெற்றி!

2011 மே 02ந் திகதி நடைபெற்ற கனடியப் பொதுத்தேர்தலில், பிரதமர் ஸ்ரீபன் காபர் தலைமையிலான கொன்சர்வேடிக் கட்சி மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது. முன்னைய பாராளுமன்றத்தில் சிறுபான்மை அரசாக இருந்த ஸ்ரீபன் கார்பரின் அரசாங்கம், இந்தத் தேர்தலில் அறுதிப் பெரும்பான்மைக்குத் தேவையான 155 ஆசனங்களையும் கடந்து 167 ஆசனங்களைக் கைப்பற்றி, ஸ்திரமான அரசாங்கமொன்றை அமைக்கும் நிலையை அடைந்துள்ளது.

இந்தத் தேர்தலில் முன்னைய ஆளும் கட்சியும், பின்னர் பிரதான எதிர்க்கட்சியாகவுமிருந்த லிபரல் கட்சி 34 ஆசனங்களை மட்டுமே பெற்று மூன்றாமிடத்துக்குத் தள்ளப்பட்டு படுதோல்வியடைந்துள்ளது. அக்கட்சியின் தலைவர் மைக்கேல் இக்ரானியேவ் தான் போட்டியிட்ட தொகுதியிலும் தோல்வியடைந்துள்ளார். இரண்டாமிடத்திலிருந்த நியு டெமக்கிரட்டிக் கட்சி 102 ஆசனங்கள் பெற்று இரண்டாமிடத்துக்கு வந்துள்ளது. பிரெஞ்சு இன மக்கள் அதிகமாக வாழும் கியூபெக் மாநிலத்தில், இதுவரை காலமும் கொடிகட்டிப் பறந்த பிரிவினைவாத புளக் கியூபெக்குவா கட்சி இம்முறைத் தேர்தலில் படுதோல்வியடைந்து, 4 ஆசனங்களை மட்டுமே பெற்றுள்ளது.

அதேவேளை இத்தேர்தலில் குறிப்பிடத்தக்க அம்சமாக, முதன்முறையாக கிறீன கட்சியின் தலைவி வெற்றிபெற்றுள்ளதுடன், இலங்கைத் தமிழ் பெண்ணொருவரும் வெற்றிபெற்றுள்ளார்.

நியு டெமக்கிரடிட் கட்சியில் போட்டியிட்ட ராதிகா சிற்சபைசன் என்ற இலங்கைத் தமிழ் பெண்மணியே வெற்றி பெற்றவராவார். அதேவேளை கொன்சவேடிக் கட்சியில் போட்யிட்ட பரம்சோதி என்ற இன்னொரு இலங்கைத் தமிழர் சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தோல்வி கண்டுள்ளார். இவர்கள் இருவரையும் வெற்றி வெற்றிபெற வைத்து, தமது அரசியல் வேலைத்திட்டங்களை கனடிய பாராளுமன்றத்தில் முனனெடுப்பதற்காக, கனடாவிலுள்ள புலிகளின் அமைப்புகள் கடுமையான பிரச்சார வேலைகளில் ஈடுபட்டிருந்தன என்பது குறிப்பித்தக்கது.

இந்தத் தேர்தல் முடிவுகள், கனடாவில் வலதுசாரி – இடதுசாரி பிளவுப் போக்குகளை வெளிப்படுத்தியுள்ளதாகவும், பிரிவினைவாதத்தை மக்கள் நிராகரித்துள்ளதை வெளிப்படுத்துவதாகவும், அரசியல் நோக்கர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இந்தத் தேர்தலின் பின்னர் நடாத்தப்பட் கருத்துக்கணிப்பொன்றை மே 10ம் திகதி வெளியிட்ட கனடாவின் முன்னணிப் பத்திரிகையான Globe and Mail, பிரதமர் ஸ்ரீபன் காப்பரின் அதிகாரத்தை நியு டெமக்கிரட்டிக் கட்சி போதியளவு அவதானிக்குமா என்ற கேள்விக்கு, 59 வீதமானோர் 'இல்லை' என்றும், 17 வீதமானோர் மட்டும் 'ஆம்' என்றும், 24 வீதமானோர் 'கருத்து கூறும் காலம் கனியவில்லை' என்றும் தெரிவித்துள்ளதாகத் தெரிவித்துள்ளது.

*

**வாழ்த்துக்கள்**

சர்வதேசத் தொழிலாளர் தினமான 'மே தினத்தை' முன்னிட்டு, உலகம் முழுவதுமுள்ள தொழிலாளி வர்க்கத்துக்கும், அனைத்து உழைப்பாளி மக்களுக்கும் 'வானவில்' தனது புரட்சிகர மேதின வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.
**ஆசிரியர் குழு**